2021 செப்டம்பர் 9]

மாநகராட்சியில் அந்த மேம்பாலம் கட்டப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு, மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

39—

சிப்காட் தொழிற்பூங்கா

***3248—திரு. மு. பாபு:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செய்யூர் தொகுதியில் சிப்காட் தொழிற் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்கள் தொடங்க ஏதுவாக, தொழில் வாய்ப்புள்ள பகுதிகளில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய தொழிற் பூங்காக்களை ஏற்படுத்தி பராமரித்து வருகிறது. இந்நிறுவனம் இதுவரை, செங்கல்பட்டு மாவட்டம் உட்பட 15 மாவட்டங்களில் 6 சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உட்பட 24 தொழிற்பூங்காக்களை சுமார் 34,900 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தி, பராமரித்து வருகிறது. செய்யூர் தொகுதி அடங்கிய செங்கல்பட்டு மாவட்டம், சிறுசேரி பகுதியில் சிப்காட் நிறுவனம்மூலம் தகவல் தொழில்நுட்பப் பூங்கா ஒன்று 782 ஏக்கர் நிலப்பரப்பில் ஏற்படுத்தப்பட்டு, தற்போது செயல்பாட்டில் உள்ளது. இங்கு பல்வேறு முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் தொழிற்கூடங்களை நிறுவியுள்ளன.

சிப்காட் நிறுவனம், புதிய தொழிற்பூங்காக்களை உருவாக்குகையில், ஒரு தொழிற்பூங்காவினை ஏற்படுத்தும் அளவிற்கு, குறிப்பிட்ட அப்பகுதியில் ஒருங்கிணைந்த போதிய நில இருப்பு, சாலை, இரயில், விமானப் போக்குவரத்து வசதி

மற்றும் தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை உருவாக்குவதற்கான வாய்ப்பு மற்றும் அப்பகுதியில் காணப்படும் தொழில்மனை தேவை போன்ற அனைத்து சாத்தியக்கூறுகளையும் ஆராய்ந்த பின்னரே புதிய தொழிற்பூங்கா அமைக்க முடிவு செய்கிறது.

செய்யூர் தொகுதியில் சிப்காட் தொழிற்பூங்கா அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசிடம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.

திரு. மு. பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் உள்ள இளைஞர்கள் வேலைக்காக சென்னையை நோக்கி நெடுந்தூரம் வருகிறார்கள். அதனால், கழகத் தேர்தல் அறிக்கையிலே சிப்காட் தொழிற்பூங்கா அமைத்துத் தருவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தயவுசெய்து என்னுடைய தொகுதியில் ஒரு சிப்காட் தொழிற்பூங்கா அமைத்துக் கொடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்தகைய தொழிற்பூங்காக்களை உருவாக்குகிறபோது வேலைவாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, வட மாவட்டங்களிலே இருக்கக்கூடிய இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்குத்தான் திண்டிவனத்திலும், செய்யாறிலும் இருக்கக்கூடிய தொழிற்பேட்டைகளில் புதிய தொழிற்சாலைகளை உருவாக்குவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவிப்பினை வெளியிட்டிருக்கிறார்கள். அதனுடைய வரிசையில் எதிர்காலத்திலே இந்தத் தேவை உருவாகும் என்று சொன்னால், நான் குறிப்பிட்டிருப்பது போன்ற இந்த நிபந்தனைகள் செய்யூர் பகுதியிலே நிறைவு செய்யப்பட்டு, அதற்கான தேவை எழக்கூடியபட்சத்தில் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர்

2021 செப்டம்பர் 9]

அவர்களுடைய கோரிக்கையை வருங்காலத்தில் அரசு கனிவுடன் கவனிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பாபு அவர்கள்.*

திரு. மு. பாபு: *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

40—

ஊராட்சிகளைப் பிரித்தல்

***2255—திரு. S. ராஜகுமார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலாடுதுறை தொகுதியில் உள்ள ஊராட்சிகளைப் பிரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மயிலாடுதுறை மற்றும் குத்தாலம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 60 ஊராட்சிகளில் கிராம ஊராட்சிகளைப் பிரிப்பது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. ராஜகுமார் அவர்கள்.*

திரு. S. ராஜகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கலைஞர் ஆட்சியிலே, 16–3–2007 அன்று ஊராட்சிகளைப்*